# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

C.C.No.5/2022

Deposition of witness for Prosecution – PW–1

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ராமசாமி | Caste | : |
| S/o.W/o.D/o. | : | தூங்காகவுண்டர் | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 4.11.2024.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் கொளத்தூர் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி 31.03.2020ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். நான் கொளத்தூர் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கொளத்தூர் காவல் ஆய்வாளர் வாகன தணிக்கைக்காக 16.12.2016ம் தேதி காலை 8.30 மணிக்கு தலைமை காவலர் 274–அர்த்தனாரி மற்றும் 1496–ராபர்ட் ஆகியோருடன் கொளத்தூர் சரகம் தண்டாமெயின் ரோடு,

அய்யம்புதூர் வெங்கடேசன் வீட்டின் அருகே வாகன தணிக்கை செய்தபோது அய்யம்புதூர் டு கொளத்தூர் நோக்கி வந்த மகேந்திரா டிப்பர் லாரி TN52W 1976 என்ற வாகனத்தை தணிக்கை செய்தபோது ஒரு யூனிட் மணல் இருந்தது. அந்த மணலை செட்டிப்பட்டி ஆற்றுப்படுகையிலிருந்து அதிக லாபத்திற்கு விற்பனை செய்வதற்காக கொண்டு வந்ததாக வண்டியின் ஓனர் சின்னதுரை (எ) துரையன் என்பவர் சொன்னார். அவர்தான் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் எதிரி ஆவார்.

அந்த இடத்தில் தனி நபர் யாரும் இல்லாததால் காவல் ஆய்வாளர் அந்த இடத்தில் கைப்பற்றுதல் மகசர் மூலம் டிப்பர் வாகனம் மற்றும் அதிலுள்ள மணல் ஆகியவற்றை கைப்பறுதல் மகசர் மூலம் கைப்பற்றினார். மகசரில் நானும் தலைமை காவலர் 274 – அர்த்தனாரியும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆகும். ஆய்வாளர் கைப்பற்றிய வாகனத்தை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். தற்போது நீதிமன்றத்தில் உள்ள மகேந்திரா டிப்பர் வாகனம் TN52W 1976 தான் காவல் ஆய்வாளரால் கைப்பற்ற வாகனம் ஆகும். மேற்படி வாகனம் சா.பொ.1 ஆகும்.

பின்னர் எதிரி மற்றும் தடயங்களை காவல் நிலையம் கொண்டு வர காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.